**படல்கும்புற பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, படல்கும்புற பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,000,000 என கணக்கீடு செய்யப்பட்டிருந்த 02 நூலகங்களின் பெறுமதி முறையாக மதிப்பீடு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,000,000 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் வைத்தியசாலை மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 1,839,088 ஆன பூர்த்தி செய்யப்பட்ட வேலையுடனான இரண்டு கடைகள் ரூபா 4,000,000 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 2,160,912 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கரமெட்டிதனை நீர் முன்மொழிவு திட்டத்தின் நீர்த்தாங்கி நிர்மாணத்திற்கு மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 280,000 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) படல்கும்புற பிரதேச சபை விளையாட்டரங்கின் ஓரக் படிக்கள் நிர்மாணத்திற்குரிய மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 300,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதேச சபை பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட 08 நிர்மாணங்களின் பூர்த்தி செய்த வேலைகளின் பெறுமதிக்காக உடன்படிக்கை செய்த பெறுமதி கணக்கீடு செய்தமையால் ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டின் வருமானத்தில் பங்களிப்பு ரூபா 240,256 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) சபைக்கு சொந்தமான டெபே உழவு இயந்திரத்தின் பெறுமதி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவினமான ரூபா 118,998 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய விளம்பர அறிவித்தல் பதாகை கட்டணங்கள் ரூபா 39,550 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 40,000 தொகையான செயலாளர் படிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வாரச்சந்தை கடைகளுக்காக 2014 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 132,635 தொகை முன்னைய ஆண்டின் போது கிடைக்க வேண்டிய கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. இதனால் கிடைக்க வேண்டிய மீதி மற்றும் திரண்ட அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 379,155 கூட்டுத்தொகையான நிலுவை குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக கணக்குகளில் இருந்து வரும் ரூபா 98,420 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 300,771,824 ஆன 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 140 ஆம் பிரிவு | - | புதிய வீதவரி மதிப்பீடொன்று மேற்கொள்ளாமல் 2006 ஆம் ஆண்டின் வீதவரி மதிப்பீட்டின் அடிப்படையில் மீாய்வாண்டில் வீதவரி கேகரிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி இல. 204 | - | 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 52 பொருள் உருப்படி பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தி | 33,333 | ஊழியர் கடன் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 381,662 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,653,093 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 785,000 | 912,508 | 867,200 | 455,308 | 573,400 | 777,678 | 735,521 | 42,157 |
| வாடகை | 2,907,000 | 4,125,784 | 3,530,771 | 595,013 | 3,530,000 | 3,578,474 | 3,554,691 | 23,783 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 648,700 | 660,070 | 660,070 | - | 460,200 | 657,718 | 657,718 | - |
| ஏனைய வருமானம் | 3,504,000 | 3,234,886 | 1,994,591 | 1,240,295 | 3,208,000 | 4,928,161 | 3,737,891 | 1,190,270 |
| மொத்தம் | **7,844,700** | **8,933,248** | **7,052,632** | **2,290,616** | **7,771,600** | **9,942,031** | **8,685,821** | **1,256,210** |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 8.9 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 7 மில்லியன் சேகரிப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் இறுதியளவில் ரூபா 2.2 மில்லியன் நிலுவை காணப்பட்டது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

(அ) முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வீத வரி ரூபா 513,310 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை வீத வரிகளிலிருந்து ரூபா 312,450 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வீத வரி அறவீடு 60 சதவீதத்தை விடவும் குறைந்த சதவீதமொன்றாக இருந்தது.

(ஆ) 03 அரச நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 87,624 ஆன வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரித்தாக அறவிடப்பட வேண்டிய ரூபா 48,985 ஆன நிலுவை நீர்க் கட்டணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

வருடாந்தக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 06 ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 568,117 ஆன நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தலுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டு கட்டணங்கள் அறவிடுவதற்கு பிரசித்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 39,550 கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

சபையினால் வீதிகளை பதப்படுத்தும் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கி அறவிடப்பட வேண்டிய ரூபா 153,660 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 134,404 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 1,233,714 ஆக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 23 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

பிறப்பிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் சபை அறிந்து கொள்ளாமையால் அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 22 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) படல்கும்புற பேருந்து நிறுத்துமிடத்தில் உள்ள 13 கடைகளிலிருந்து புதிய மதிப்பீட்டு வாடகை அறவிடப்படாமையால் முன்னைய ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கும் உரிய ரூபா 196,800 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) போகஹபெலஸ்ஸ 01 ஆம் இலக்க கடையிலிருந்து மாதந்த வாடகை ரூபா 3,850 அறவிடப்படாமையால் பிரதேச சபைக்கு ரூபா 38,173 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) வருடாந்தம் கேள்வி கோரப்பட வேண்டிய 02 குத்தகை ஆதனங்கள் முகாமைத்துவக் குழுத் தீர்மானத்தின் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2016 நவம்பர் 01 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த புதிய கடைத் தொகுதியின் 10 கடைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(i) 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 35 கட்டிட திட்டங்களுக்காக 1985 மார்ச் 20 ஆந் திகதிய 08/1/38 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 1985 இன் மார்ச் 20 ஆந் திகதிய 08/1/38 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 42 அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக உரிய கட்டணங்கள் அறவிட்டு மேவுகை அங்கீகாரம் வழங்குவதற்கோ அல்லது சட்ட ரீதியான நடைமுறையொன்றை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற / குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

(அ) பிரதேச சபைக்கு சொந்தமான 05 ஆதனங்களை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்காமல் விளைவற்ற வகையில் வைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமான 3 வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக 2013 டிசெம்பர் 03 ஆந் திகதி கஹகொல்ல இயந்திர பொறியியளாலர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

நிர்மாண வேலைகளுக்குரிய சபையினால் ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கை முறையான மாதிரிபடிவத்தில் இல்லாதிருந்ததுடன் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நிபந்தனைகள் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரித்தாக பிரதேச சபையின் பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டிற்காக சபையினால் போதியளவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| | --------------------- | | -------------------------- |
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | ஆவணங்களுக்கு உட்படுத்தாமை |
| | | (ii) | முறையாக மதிப்பீடு செய்யப்படாமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | | (ii) | மதிப்பிடப்பட்ட வாடகை அறவிடப்படாமை. |
| | | (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படாமை |
| | | (iv) | குத்தகைக்கு வழங்கக் கூடிய ஆதனங்களை குத்தகைக்கு வழங்காமை. |